# அமைச்சர் பொது வெளியில் போதைப் பொருள் உபயோகித்ததைக் கண்டித்து ஆர்ப்பாட்டம்!

## திருவண்ணாமலையில் நூற்றுக்கணக்கான மாணவர்கள் – இளைஞர்கள் கைது!

திருவண்ணாமலை, ஜூன் 30 -

தமிழ்நாடு மனிதவள மேலாண்மைத்துறை அமைச்சர் சரத்குமார் பொது வெளியில் போதை பொருள் உபயோகப்படுத்தியதை கண்டித்து, திருவண்ணாமலை தெற்கு, வடக்கு மாவட்ட தி.மு.க. மாணவர் அணி சார்பில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

ஆர்பாட்டத்திற்கு கிளம்பிய மாணவர், இளைஞர் அணியினரை வழியிலேயே மறித்து காவல் துறையினர் கைது செய்தனர். கைது செய்யப்பட்ட கழகத் தோழர்களை முன்னாள் சட்டப்பேரவை துணைத் தலைவர் கு.பிச்சாண்டி சந்தித்து வாழ்த்து கூறினார்.

நேற்று (29.06.2026 - திங்கட்கிழமை) காலை 9.30மணிக்கு, திருவண்ணாமலை, அண்ணா சிலை அருகில், திருவண்ணாமலை தெற்கு, வடக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் தமிழ்நாடு மனிதவள மேலாண்மைத்துறை அமைச்சர் சரத்குமார் பொது வெளியில் போதை பொருள் உபயோகப்படுத்தியதை கண்டித்து, மாபெரும் கண்டன ஆர்பாட்டம் நடைபெற்றது.

கண்டனஆர்பாட்டத்திற்கு தெற்கு மாவட்ட அமைப்பாளர் காலேஜ் கு.ரவி, வடக்கு மாவட்ட அமைப்பாளர் எம்.எஸ்.டி. கார்த்திகேயன் ஆகியோர் தலைமை வகித்தனர்.

வடக்கு மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் எவரெஸ்ட் நரேஷ்குமார், தெற்கு மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர்கள் சு.ராஜாங்கம், எஸ். கண்ணதாசன், கோ.ராஜசேகர், ரமேஷ், திலிப்குமார், சதிஷ்குமார், செல்வம் பிரகாஷ், மகளிர் அணி அமைப்பாளர்கள் கற்பகம் சரவணன், உ.நித்யா, தகவல் தொழில்நுட்ப அணி அமைப்பாளர் கு.கணேஷ் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

கண்டன ஆர்பாட்டத்திற்கு தலைமை வகித்த மாவட்ட அமைப்பாளர்கள் காலேஜ் கு.ரவி, எம்.எஸ்.டி.கார்த்திகேயன் ஆகியோரை தலைமைச் செயற்குழு உறுப்பினர் இரா.ஸ்ரீதரன், மாநகரச் செயலாளர் ப.கார்த்திவேல்மாறன், எஸ்.பன்னீர் செல்வம், பிரியா விஜயரங்கன் ஆகியோர் வாழ்த்தி வழியனுப்பிவைத்தனர்.

காந்தி சிலை அருகில் தொடங்கிய கண்டன ஆர்பாட்டாத்தில்...

- விஜய் அரசே ரீல்ஸ் அரசே! நீக்கிடுக! நீக்கிடுக! போதை அமைச்சரை நீக்கிடுக!
- மனிதவள அமைச்சரா? மாணவர்களை கெடுக்க அமைச்சரா ?
- மனிதவள அமைச்சரா? இளைஞர்களை கெடுக்க அமைச்சரா ?
- பதவி விலகு! பதவி விலகு! அமைச்சர் சரத்குமாரே பதவி விலகு !
- போதைக்கு எதிராக முதல்வர் மரத்தான் ஓட்டம்!

போதையில் மனிதவள அமைச்சரா ?

- கில்லி முதல்வரே அரசாங்கம் நடக்குதா? சினிமா ஷூட்டிங் நடக்குதா?
- சந்தி சிரிக்குது! சந்தி சிரிக்குது! ரீல்ஸ்ஆட்சியில் சட்டம் ஒழுங்கு சந்தி சிரிக்குது!
- அமைச்சரே மாத்திரை தயார் ! பொடியாக்க நீங்கள் தயாரா ?

என கண்டன முழக்கங்கள் எழுப்பி அண்ணா சிலை அருகே அமைக்கப்பட்ட மேடை நோக்கி சென்ற போது, காவல் துறையினர் மாணவரணியினரை வழியிலேயே மடக்கி கைது செய்தனர்.

கைது செய்து அடைக்கப்பட்டிருந்த மாணவர் அணி, இளைஞரணி, மகளிரணி மற்றும் கழக தோழர்களை முன்னாள் சட்டப்பேரவை துணைத்தலைவர் கு.பிச்சாண்டி, நாடாளு மன்ற உறுப்பினர் சி.என். அண்ணாதுரை, சந்தித்து வாழ்த்து தெரிவித்தார்.

கண்டன ஆர்பாட்டத்தில் மாநில அமைப்புசாரா தொ.மு.ச பிரச்சார செயலாளர் ஏ.ஏ.ஆறுமுகம், மாவட்ட அமைப்பாளர் மங்கலம் பிரபாகரன், பவர் அன்பரசு, இரா.அன்பரசு, ஒன்றியச் செயலாளர் த.செந்தில்குமார், பேரூர் செயலாளர் சி.கே.அன்பு, வடக்கு மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர்கள் சி.ராம்மோகன், ப.கலாம்பாஷா, கோ.விக்னேஷ், ஆர்.தமிழ்குடிமகன், தெற்கு மாவட்ட மாணவரணி துணை அமைப்பாளர்கள் மு.க. கௌதமன், இரா.மின்னல் கமல், ஏ.வெங்கட், மாதேஷ்வரன், வடக்கு மாவட்ட மாணவரணி துணை அமைப்பாளர்கள் கே.வி.ஆர்.சுரேஷ்பாபு, ஷர்புதின், மணிபாரதி, கீர்தனா அரவிந்தன் மற்றும் பகுதிச் செயலாளர்கள் அ. கோவிந்தன், ந.சீனுவாசன், குட்டி க.புகழேந்தி, சி.சண்முகம், மாநகர நிர்வாகிகள் வட்டி அருணாசலம், இல.குணசேகரன், கோல்டு எஸ்.பிரபு, ஹக்கீம்சேட், மாநகர இளைஞரணி அமைப்பாளர் மண்டி பிரகாஷ், ஆர்.வெங்கடேஷ், ரயால் தியாகு, பச்சையம்மாள் ஏசு, கஸ்தூரி உட்பட நூற்றுகணக்கான மாணவர் அணியினர் கைது செய்யப்பட்டனர்.



தருமபுரி மேற்கு மாவட்டம் பாப்பிரெட்டிப்பட்டி மேற்கு ஒன்றிய மாணவரணி துணை அமைப்பாளர் உதயசூரியன் (27) உடல் நலக்குறைவால் சேலம் அரசு மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வரும் தகவல் அறிந்து தருமபுரி மேற்கு மாவட்ட செயலாளர் முனைவர்.பி.பழனியப்பன் நேரில் சென்று சிகிச்சை குறித்து கேட்டறிந்து ஆறுதல் கூறினார். உடன் மாவட்ட மாணவரணி துணை அமைப்பாளர் சுதா.சுர்ஜித்,ஒன்றிய இளைஞர் அணி துணை அமைப்பாளர் நரேஷ்,முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர் பொன்மணி உள்ளிட்ட திமுகவினர் உள்ளனர்.

### அ.தி.மு.க. மாவட்ட இளைஞர் பாசறை துணைச் செயலாளர்

# தடாகம் செல்வம் தலைமையில் - அ.தி.மு.க.வினர் கழகத்தில் இணைந்தனர்!

## விழுப்புரம் வடக்கு மாவட்டச் செயலாளர் செஞ்சி மஸ்தான் முன்னிலையில்!

செஞ்சி ஜூன் 30-

செஞ்சி ஒன்றிய தி.மு.க. ஏற்பாட்டில் அ.தி.மு.க. மாவட்ட இளைஞர் பாசறை துணை செயலாளர் தடாகம் ஊராட்சி மன்ற தலைவர் செல்வம் தலைமையில்

அதிமுகவைச் சேர்ந்தவர்கள்விழுப்புரம் வடக்கு மாவட்ட செயலாளர், முன்னாள் அமைச்சர் செஞ்சி மஸ்தான் முன்னிலையில் தி.மு.க.வில் இணைந்தனர்.

விழுப்புரம் வடக்கு மாவட்டம் செஞ்சி மேற்கு ஒன்றியம் தி.மு.க. சார்பில் செஞ்சி ஒன்றிய பெருந்தலைவர் விஜயகுமார் ஏற்பாட்டில் அ.தி.மு.க. மாவட்ட இளைஞர் பாசறை துணைச் செயலாளர் தடாகம் ஊராட்சி மன்ற தலைவர் இரா. செல்வம் தலைமையில் அக்கட்சியைச் சேர்ந்த நிர்வாகிகள் ராஜேஷ், பார்த்திபன், பசுபதி, சிவப்பிரகாசம் உள்ளிட்ட நிர்வாகிகள் அக்கட்சியில் இருந்து விலகி செஞ்சியில் நடைபெற்ற நிகழ்ச்சியில் விழுப்புரம் வடக்கு மாவட்டச் செயலாளர், முன்னாள் அமைச்சர் செஞ்சி மஸ்தான் முன்னிலையில் தி.மு.க.வில் இணைந்தனர்.

தி.மு.க.வில் இணைந்த அனைத்து நிர்வாகிகளுக்கும் விழுப்புரம் வடக்கு மாவட்ட செயலாளர் முன்னாள் அமைச்சர் செஞ்சி மஸ்தான் சால்வை அணிவித்து வரவேற்று வாழ்த்துத் தெரிவித்தார். மேலும் தி.மு.க.வில் இணைந்த அனைவரும் கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களின் கரத்தை வலுப்படுத்தும் வகையில் தி.மு.க. கழகத்திற்கு பணியாற்ற வேண்டுமென அவர் அறிவுறுத்தினார்.

நிகழ்ச்சியில் செஞ்சி பேரூராட்சி மன்ற தலைவர் மொக்தியார் அலி மஸ்தான், வல்லம் தெற்கு ஒன்றிய செயலாளர் மொடையூர் துரை, மாவட்டப் பிரதி நிதி கதிரவன், விழுப்புரம் வடக்கு மாவட்டப் பொறியாளர் அணி துணை அமைப்பாளர் சிவப்பிரகாசம், சே.பேட்டை ஊராட்சி மன்றத் தலைவர் சந்தானம், நிர்வாகிகள் இளைஞர் அணி சுரேஷ், செல்வகுமார், முனுசாமி, உமா சந்திரன் உள்ளிட்ட நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

### மீண்டும் மதமாற்ற தடைச் சட்டமா?

# பா.ஜ.க. அஜெண்டாவுக்கு வேலை பார்க்கும் த.வெ.க.!

## தி.மு.க. சிறுபான்மையினர் நல உரிமைப்பிரிவுச் செயலாளர் டாக்டர் அ.சுபேர்கான் அறிக்கை!

**சென்னை, ஜூன் 30-**

**“மீண்டும் மதமாற்ற தடைச் சட்டத்திற்கு பா.ஜ.க.வின் அஜெண்டாவுக்கு த.வெ.க. வேலை பார்ப்பதா?” என்று கழக சிறுபான்மையினர் நல உரிமைப்பிரிவு செயலாளர் டாக்டர் அ.சுபேர்கான் கண்டனம் தெரிவித்துள்ளார்.**

இது குறித்து அவர் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

தமிழ்நாட்டின் நீண்டநெடிய சமூகநீதி வரலாற்றில், ஒருவரின் சமூக மற்றும் கல்வி ரீதியான பின்னடைவை அடிப்படையாகக் கொண்டே உரிமைகள் தீர்மானிக்கப்பட்டு வந்துள்ளன. முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் இஸ்லாமியர்களில் பிற்படுத்தப்பட்டோருக்கு இட ஒதுக்கீடு வழங்கியதும் அந்த போராட்ட வரலாற்றின் தொடர்ச்சிதான்.

ஆனால், இன்று தவெக அரசின் நிர்வாகக் குளறுபடிகளாலும், சட்ட ரீதியான அலட்சியத்தாலும் அந்த அடிப்படைத் தகர்க்கப்பட்டு, சிறுபான்மையினரின் உரிமைகள் கேள்விக்குறியாக்கப்பட்டுள்ளன.

இஸ்லாத்துக்கு மதம் மாறிய நபர், பிற்படுத்தப்பட்டோர் சான்றிதழ் கேட்டு தொடர்ந்த வழக்கில், இஸ்லாமைத் தழுவிய பிற்படுத்தப்பட்ட மக்களின் இட ஒதுக்கீட்டு உரிமையைப் பாதுகாக்கும் G.O.(Ms) No.31, BC, MBC and MW Department, dated 09.03.2024 ஐ மதுரை கிளை உயர்நீதிமன்றம் ரத்து செய்திருப்பது, சமூகநீதிப் போரில் ஏற்பட்டுள்ள மிகப்பெரிய பின்னடை வாகும்.

இந்தத் தீர்ப்பின் பின்னணியில்உள்ளசட்டநுணுக்கங்களையும், த.வெ.க. அரசு காட்டிய மெத்தனப்போக்கையும் பார்க்கும்போது, இது மறைமுகமாக



பா.ஜ.கவின் ‘மதமாற்ற தடைச் சட்ட’ அஜெண்டாவுக்குத் துணை போகிறதோ என்று பலமான சந்தேகம் எழுகிறது.

அரசியலமைப்புச் சட்டத்தின் Article 25 ஒரு குடிமகன் தான் விரும்பிய மதத்தைப் பின்பற்றவும், பரப்பவும் முழு சுதந்திரம் அளிக்கிறது. ஆனால், தற்போதைய தீர்ப்பில், “இஸ்லாமிற்கு மாறிய ஒருவர் வெறும் முஸ்லிம் மட்டுமே, அவருக்குப் பழைய சாதி அடையாளம் கிடையாது” (a convert to Islam is only a Muslim and that’s all there is to it) என்று இட ஒதுக்கீட்டை மறுத்திருப்பது தேன் தடவிய நஞ்சாகவே இருக்கிறது. மதம் மாறுவதால் ஒருவரின் ஆன்மீக நம்பிக்கை மாறலாம்; ஆனால் அவர் தலைமுறை தலைமுறையாக அனுபவித்து வந்த சமூகப் புறக்கணிப்பும், கல்விப் பின்னடைவும் ஒரு நாளில் மறைந்துவிடாது. இந்த அடிப்படை உண்மையை நீதி மன்றத்தில் நிலைநிறுத்த த.வெ.க. அரசு தவறிவிட்டது. இந்தச் சட்டப் பின்னடைவு ஒரு அபாயகரமான அரசியல் மாற்றத்தின் அறிகுறியாகும்.

மேற்படி வழக்கில் விசாரணையில், ஒரு அரசாணையின் (G.O.) செல்லுபடித்தன்மை குறித்த கேள்வி எழும்போது, அதைத் தக்கவைக்கத் தேவையான வரலாற்றுத் தரவுகளையும், Backward Classes Commission வழங்கிய பரிந்துரைகளையும் முழுமையாக நீதிமன்றத்தில் தாக்கல் செய்யும் கடமையிலிருந்து த.வெ.க. அரசு தவறியிருக்கிறது. குறிப்பாக, ஒரு Division Bench ஏற்கனவே வழங்கிய தீர்ப்புகளுக்கு மாறாக மற்றொரு அமர்வு கருத்து தெரிவிக்கும்போது, சட்ட விதிகளின்படி இந்த வழக்கை ஒரு Larger Benchக்கு (பெரிய அமர்வுக்கு) மாற்ற வேண்டும் என்று வலியுறுத்த வேண்டிய அரசியல் பொறுப்பு த.வெ.க. அரசுக்கு இருந்தது. அதைச் செய்யாமல் மௌனம் காத்தது, சிறுபான்மையினர் மற்றும் பிற்படுத்தப்பட்ட மக்களின் உரிமைகளை பா.ஜ.க. வின் பலிபீடத்தில் ஏற்றி வைப்பதற்குச் சமமாகும்.

மேலும், இந்த வழக்கின் விசாரணையின்போது மனுதாரர் தரப்பு வழக்கறிஞர் விலகிய பிறகும், பாதிக்கப்பட்ட தரப்பினரின் வாதங்களைக் கேட்காமல் அவசரகதியில் வழக்கை முடிக்க நீதிமன்றம் முற்பட்டபோது, இயற்கைநீதியைக் காக்க அரசுத் தரப்பு வலுவாக குரல் கொடுக்கவில்லை. “இஸ்லாத்தில் படிநிலைகள் இல்லை” என்ற தர்க்கத்தை முன்வைத்து, யதார்த்தத்தில் நிலவும் சமூக அடுக்குகளை நீதிமன்றம் மறுத்தபோது, அதைச் சட்ட ரீதியாக முறியடிக்க த.வெ.க. அரசிடம் எந்தக் கோட்பாட்டுத் தெளிவும் இல்லை.

2023ம் ஆண்டு நடந்த ஒரு புத்தக வெளியீட்டு விழாவில் பேசிய நீதிபதி சுவாமிநாதன் “அரசியலமைப்பு சட்டம் அப்படியே இருக்க வேண்டுமெனில், அது உருவாக்கப்பட்ட போது இருந்த மக்கட்தொகை விகிதம் அப்படியே பேணப்பட வேண்டும்” என்று பேசினார். அதற்கு தன்னுடைய ட்வீட்டர் பக்கத்தில் பதிலளித்த மூத்த வழக்கறிஞர் கபில் சிபல் ”நீதிபதிகள் இத்தகைய மனநிலையில் இருந்தால் அரசியல் சட்டத்தை பாதுகாக்க முடியாது.” என்று விமர்சித்திருந்தார்.

இப்போது ஜி.ஆர்.சுவாமிநாதன் கொடுத்த தீர்ப்பின் விளைவாக, மதம் மாறினால் இட ஒதுக்கீடு பறிப்பு என்ற தண்டனை என்ற அச்சுறுத்தலின் மூலம், அரசியலமைப்பு வழங்கியுள்ள மதச்சுதந்திரத்தைப் பறிக்கும் பாஜகவின் மறைமுக மதமாற்ற தடைச்சட்டத் திட்டத்திற்கு த.வெ.க. அரசு சிவப்புக் கம்பளம் விரித்துள்ளது என்பது தெளிவாகிறது.

அந்த அஜெண்டாக்களுக்கு இணக்கமான முதலமைச்சரின் அரசு, இணக்கமான சட்டத்துறை அமைச்சர் என த.வெ.க. அரசு பா.ஜ.க.வுடன் பேணும் இணக்கம் மக்களிடையே பதட்டத்தை ஏற்படுத்தியிருக்கிறது. முன்னாள் முதலமைச்சர் ஜெயலலிதா ‘கட்டாய மதமாற்ற தடைசட்டம்’ என்ற வகுப்புவாத சட்டத்தை கொண்டு வந்த போது, திராவிட முன்னேற்ற கழகம் முன்னணியில் நின்று போராடி அந்த சட்டத்தை முறியடித்தது.

தற்போது வந்திருக்கிற நெருக்கடியிலும், திராவிட முன்னேற்ற கழகம், முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞரின் வழி நின்று நம் உரிமைகளை தாரைவார்க்கும் த.வெ.க. அரசின் கள்ளத்தனமான கூட்டணியையும் அம்பலப் படுத்தி, சமூகநீதியை நிலை நாட்டி. உரிமைகளை மீட்கும் வரை எமது போராட்டம் தொடரும்.

இவ்வாறு அவர் தமது அறிக்கையில் கூறியுள்ளார்.



பெருநகர சென்னை மாநகராட்சி, 11 வது மண்டலம், 147 வது வார்டில் ஐந்து வயதிற்கு உட்பட்ட குழந்தைகளுக்கு போலியோ சொட்டு மருந்து முகாமினை 147 வது வார்டு மாமன்ற உறுப்பினரும், கல்வி நிலைக் குழு உறுப்பினருமான ரமணி மாதவன் துவக்கி வைத்தார். உடன் 147 வது வட்டக் கழகச் செயலாளர், மேனாள் கவுன்சிலர் மேட்டுக்குப்பம் லயன் எஸ்.ஜி.மாதவன் மற்றும் கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.


13-ஆம் ஆண்டு நினைவஞ்சலி

ஜூன் 30 2026 செவ்வாய்க்கிழமை



புரசை க.எத்திராசன்

தன்னலம் மறந்த எங்கள் பாசவிளக்கே... நேசமிகு புன்னகையால் திராவிடத்தை நேசித்தவரே...

நினைவுடன்

பி.கே.சேகர்பாபு MLA

முன்னாள் இந்து சமய மற்றும் அறநிலையத்துறை அமைச்சர்

சென்னை கிழக்கு மாவட்ட செயலாளர்

சொ.வேலு MC — எ.வ.ப.செயலாளர் - நியமன குழு உறுப்பினர்

வி.சுதாகர் — எழும்பூர் தெற்கு பகுதி செயலாளர்

பரிதிஇளம்சுருதி MC — மாநில அயலக அணி துணை செயலாளர்

வட்ட செயலாளர்கள் : ஆர்.எம்.ரங்கநாதன் சி.சேகர் சு.மனோகர் ந.பாலு வி.அபாய் தி.தயாளன் எல்.சுந்தர்ராஜன் MC வான்மதிகதிரவன் பால்பின்அரி இ.மொய்தீன் ஆர்.பாபு வி.விஜயகுமார்

என்றும் உங்கள் நீங்கா நினைவுடன்

புனிதவதி எத்திராசன் MC

சென்னை கிழக்கு மாவட்ட துணைச் செயலாளர் - பொது சுகாதார குழு உறுப்பினர்

புரசை ஜி.தாமோதரன் - அமலாதேவி தாமோதரன்

கலை இலக்கிய பகுத்தறிவு பேரவை மாவட்ட அமைப்பாளர் / மு.மகளிர்அணி இணைச் செயலாளர்

மற்றும் உறவினர்கள், நண்பர்கள்